**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC .No. 569/2023

**2024 – ம் ஆண்டு ஜனவரி மாதம் 09–ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 1 – வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின் படி) A.அக்ஸ்சிலியாமேரி M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.** | : 1 | | |
| **பெயர்** | : **கருணாநிதி** | **தொழில்** | |
| **த/பெ.** | : **கந்தசாமி** | **வட்டம்** | : |
| **கிராமம்** | : | **சமயம்** | : |
| **சாதி** | : | **வயது** | : |

<u>09.01.2024</u>

<u>முதல் விசாரணை</u>

புகாரில் புகார்தாரர் எனது தரப்பு சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக 18.03.2023 தேதியிட்ட எதிரி வழங்கிய ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி அரியலூர் கிளையின் காசோலை **ம.சா.ஆ. 1** ஆகும். 22.03.2023 தேதியிட்ட காசோலை திருப்பப்பட்ட மெமோ **ம.சா.ஆ.2** ஆகும். 31.03.2023 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.3** ஆகும். 10.04.2023 தேதியிட்ட எதிர்மனுதாரர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.4** ஆகும். ஆகியவற்றை ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகொளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) திரு.M.அறிவு.
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.